**(Under Section.173 BNSS)**

# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under ~~Section 154~~ Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு ~~154 இன் கீழ்~~)

**TAMIL NADU POLICE**

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8109481

1. District : மாவட்டம் Coimbatore PS: காவல்நிலையம் V&AC Year: ஆண்டு 2025 FIR No.: மு.த.அ. எண் 07/2025/AC/CB Date: நாள் 09.4.2025

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Sections பிரிவுகள்:

   (ii) Act சட்டம்: Act 1988 as amended Sections பிரிவுகள் 7

   (iii) Act சட்டம்: by the PC Act (Amendment) Act 2018 Sections பிரிவுகள்:

   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 5.4.2025 Date to : நாள் வரை 6.4.2025

   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை 1430 hrs

   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 9.4.2025 Time : நேரம் 1045 hrs

   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 9.4.2025 Time : நேரம் 1045 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Tamil Typed (Computer Print)

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் approx. 25 km South

   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி @ on Chettipalayam police station

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் T. Krishnamoorthy (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் S/o. Thangavel

   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 36/25 (d) Nationality நாட்டினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்

   (f) Occupation : தொழில் Private Employee (g) Address : முகவரி Site no: 45, Anthiv-Rithvik house, Sri Surya lakshmi Garden, Avvai Nagar, Malumichampatti, Coimbatore.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   1) Tr. Ramesh, Police Constable, Chettipalayam police Station, Coimbatore District.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   —

* GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate Sheet enclosed

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS................................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

9/4/2025

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு 9/4/25.

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
9.4.2025 at 1200 hrs.

Name: பெயர் C. Latha
Rank: நிலை Inspector of police, VKAC, Coimbatore.

<u>கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.07/2025/AC/CB u/s.7 of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி–</u>

இன்று 09.04.2025 ஆம் தேதி புதன்கிழமை காலை 10.45 மணிக்கு கோவை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு காவல் ஆய்வாளர் திருமதி.லதா ஆகிய நான் நிலைய அலுவலில் இருந்தபோது கோவை, மலுமிச்சம்பட்டி, அவ்வை நகர் அருகில், ஸ்ரீ சூர்யலட்சுமி கார்டன், அன்திவ் – ரித்விக் ஹவுஸ், சைட் எண்.45 ல் வசிக்கும் தங்கவேல் என்பவரது மகன் திரு.T.கிருஷ்ணமூர்த்தி என்பவர் கணினியில் தமிழில் தட்டச்சு செய்த ஒரு எழுத்து மூலமான புகாரினை கொடுத்தார். நான் அந்த புகாரினை படித்து பார்த்தேன். புகார்தாரரின் புகாரின் விபரம் பின்வருமாறு – அனுப்புநர் T.கிருஷ்ணமூர்த்தி, வயது-36, த/பெ.தங்கவேல், சைட் எண்.45, அன்திவ் – ரித்விக் ஹவுஸ், ஸ்ரீ சூர்யலட்சுமி கார்டன், அவ்வை நகர் அருகில், மலுமிச்சம்பட்டி, கோவை. பெறுநர் காவல் ஆய்வாளர், லஞ்ச ஒழிப்பு பிரிவு, கோவை. அய்யா, நான் மேற்கண்ட விலாசத்தில் எனது குடும்பத்துடன் கடந்த 1½ வருடமாக குடியிருந்து வருகிறேன். அதற்கு முன்பு கோவை தெலுங்குபாளையத்தில் உள்ள டி.ஜி.ராமசாமி நாயடு தெரு, கதவு எண்.15 ல் குடியிருந்து வந்தேன். நான் B.E படித்துள்ளேன். நான் கோவையில் உள்ள ஒரு தனியார் நிறுவனத்தில் மேம்பாட்டு பொறியாளராக பணிபுரிகிறேன். எனது மனைவி சௌந்தர்யா B.B.A படித்துள்ளார். அவர் கோவையில் உள்ள ஒரு தனியார் நிறுவனத்தில் கணினி இயக்குபவராகவும் வேலை செய்து வருகிறோம். எங்கள் இருவரது பெயரிலும் ஏற்கனவே பழைய முகவரியில் பாஸ்போர்ட் இருந்தது. அதனை தற்போது குடியிருந்து வரும் முகவரிக்கு மாற்றம் செய்ய வேண்டி ஆன்லைன் மூலம் கடந்த 31.03.2025 ஆம் தேதி Re-Issue Passport Issuance under Normal Scheme ல் விண்ணப்பபம் செய்தோம். விண்ணப்பம் சம்மந்தமாக நாங்கள் இருவரும் கடந்த 03.04.2025 ஆம் தேதி கோவை, சித்ராவில் உள்ள பாஸ்போர்ட் அலுவலகத்திற்கு நேரில் சென்று அசல் ஆவணங்களை காண்பித்து வெரிபிக்கேஷன் முடித்துவிட்டு வந்தோம். அதன் பிறகு மறுநாள் 04.04.2025 ஆம் தேதி எனது <u>mail.id: krishnasoundadeutschland@gmail.com</u> க்கு எங்களது விண்ணப்பம் போலீஸ் வெரிபிக்கேசனுகாக, கோவை செட்டிபாளையம் காவல் நிலையத்திற்கு அனுப்பபட்டுள்ளதாக தகவல் வந்தது. இதனால் கடந்த 05.04.2025 ஆம் தேதி மாலை சுமார் 07.30 மணிக்கு மேல் நான், என் மனைவியை அழைத்து கொண்டு

செட்டிபாளையம் காவல் நிலையத்திற்கு சென்று அங்கு போர்ட்டிகோவில அமர்ந்திருந்த போலீஸ்காரரிடம் எங்களது பாஸ்போர்ட் விண்ணப்பம் வெரிபிக்கேசனுக்கு வந்துள்ளதாக எனக்கு mail வந்தது என்று கூறியபோது அவர் போலீஸ் ஸ்டேசனில் உள் அறையில் இருந்த ரமேஷ் என்பவரை போய் பார்க்கும் படி கூறினார். அதன்படி நாங்கள் இருவரும் உள்ளே சென்று போலீஸ்காரர் ரமேஷ் அவர்களை பார்த்து போலீஸ் வெரிபிக்சேனுக்காக எங்களது பாஸ்போர்ட் விண்ணப்பம் காவல் நிலையத்திற்கு வந்துள்ளதாக எனது mail id க்கு தகவல் வந்துள்ளது சம்மந்தமாக அவரிடம் கூறினேன். அதற்கு அவர் எங்களிடமிருந்த விண்ணப்பம் மற்றும் அதன் சம்மந்தப்பட்ட ஆவணங்களின் நகல்களை பெற்று பார்வையிட்டு நாங்கள் குடியிருந்து வரும் முகவரிக்கு உண்டான இரண்டு ஆதாரங்களை கேட்டார். அப்போது எங்களிடம் முகவரி சம்மந்தமாக ஆதார் கார்டு மட்டுமே இருப்பதாக அவரிடம் கூறினோம். அதற்கு அவர் நாளை காலை 10 மணிக்கு மேல் நிலையம் வந்து மற்றோரு ஆதாரத்தையும், எங்கள் இருவரது போட்டோவையும் கொண்டு வரும்படி கூறினார். மேலும் அவர் எங்களிடம் வெரிபிக்கேசன் சம்மந்தமாக ஒரு விண்ணப்பத்திற்கு பணம் ரூ.500/- வீதம் இரண்டு விண்ணப்பத்தற்கும் சேர்த்து மொத்தம் ரூ.1000/- கொடுக்க வேண்டும் என்றும், நாளை வரும்போது அதனையும் கொண்டு வாருங்கள் என்று கூறினார். நாங்களும் சரி என்று கூறி வந்துவிட்டோம். பின்னர் மறுநாள் 06.04.2025 ஞாயிற்றுக்கிழமை காலை சுமார் 11.30 மணியளவில் செட்டிப்பாளையம் காவல் நிலையத்திற்கு சென்று ரமேஷ் அவர்களை சந்தித்து முகவரிக்கு உண்டான எங்கள் இருவருடைய வங்கி புத்தக நகல் மற்றும் இருவரது போட்டோவையும் கொடுத்தோம். அப்போது அவர் மேற்படி எங்களது இருவரது போட்டோ பழையதாக இருப்பதாகவும், தற்சமயம் எடுக்கப்பட்ட போட்டோ வேண்டும் என்றும் கேட்டார். அதனால் நாங்கள் போத்தனூர் சென்று அங்குள்ள போட்டோ ஸ்டுடியோவில் போட்டோ எடுத்துவிட்டு மீண்டும் செட்டிபாளையம் காவல் நிலையத்திற்கு மதியம் சுமார் 02.30 மணிக்கு சென்று ரமேஷ் அவர்களை சந்தித்து போட்டோவை கொடுத்தோம். அதனை அவர் வாங்கி வைத்துவிட்டு, எங்களிடம் அவர் வெரிபிக்கேசன் சார்ஜ் கொண்டு வந்தீர்களா என்று கேட்டார். அதற்கு நான் தற்போது பணம் கொண்டு வரவில்லை என்று கூறினேன். அதற்கு அவர் போலீஸ் வெரிபிக்கேசனுக்கு சார்ஜ் ரூ.500/- கட்டணம் கட்ட வேண்டும் அப்ப தான் வெரிபிக்கேசன் செய்து அனுப்பி வைக்க முடியும் என்று தெரியாதா என்று கேட்டார். அதற்கு நான் நாளை தான் சம்பளம் போடுவார்கள், அதனால் நாளை வந்து தருவதாக அவரிடம் கூறினேன். அதற்கு அவர் போலீஸ்

வெரிபிக்கேசன் செய்து அனுப்ப நாளைக்கு கொண்டு வந்து கொடுங்க என்று கூறினார். மேலும் அவர் எங்களிடம் ஒரு பேப்பரில் எங்கள் மீது குற்ற வழக்கு எதுவும் இல்லை என்று எழுதி கொடுக்கும்படி சொன்னார். நாங்களும் அவ்வாறே எழுதி கொடுத்துவிட்டு வந்தோம். பின்னர் வீட்டிற்கு வந்து தெரிந்தவர்களிடம் விசாரித்து பார்த்ததில் மேற்படி பாஸ்போர்ட்டில் முகவரி மாற்றம் செய்ததற்காக போலீஸ் வெரிபிக்கேசனுக்கு காவல் நிலையத்தில் யாருக்கும் எந்த பணமும் தரவேண்டியதில்லை என்று தெரிந்து கொண்டேன். மேற்படி ரமேஷ் என்பவர் எங்களிடம் ஒவ்வொரு விண்ணப்பத்திற்கும் ரூ.500/– கட்டணம் கட்டவேண்டும் என்றும், இருவிண்ணப்பத்திற்கு சேர்ந்து ரூ.1000/– கேட்பது அவருக்கு லஞ்சமாகத்தான் கேட்கிறார் என்று தெரியவருகிறது. எனவே எங்கள் இருவரது பாஸ்போர்டை முகவரி மாற்றம் செய்ததற்காக போலீஸ் வெரிபிக்கேசனுக்கு லஞ்சமாக பணம் ரூ.1,000/– ஐ போலீஸ்காரர் ரமேஷ் அவர்களுக்கு கொடுக்க எனக்கு விருப்பமில்லை. எனவே அவர் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். மேலும் கடந்த **06.04.2025** ஆம் தேதி செட்டிபாளையம் காவல் நிலையத்தில் வைத்து எங்களுக்கும், போலீஸ்காரர் திரு.ரமேஷ் என்பவருக்கும் நடந்த உடையாடல்களை எனது செல்போனில் பதிவுசெய்ததை நான் Pen Drive ல் பதிவிறக்கம் செய்துள்ளேன். அந்த Pen Drive யையும் புகார்மனுவுடன் இணைத்து கொடுக்கிறேன். இப்படிக்கு, ஒப்பம் x/x/x/x/, 9/4/2025 (T.Krishnamoorthy) இடம் – கோவை, தேதி – 09.04.2025. மேற்படி புகார் சம்மந்தமாக ரகசிய விசாரணை மேற்கொண்டதில் இருந்தும், புகார்தாரருக்கும் எதிரிக்கும் இடையே தனிப்பட்ட முறையில் ஏதேனும் முன்விரோதம் உண்டா என்பது குறித்து மேற்கொள்ளப்பட்ட இரகசிய விசாரணையில் அவ்வாறு ஏதுமில்லை என்றும் புகார்தாரரின் புகாரின் உண்மைதன்மை உறுதி செய்யப்பட்டு, எதிரியின் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய தகுந்த முகாந்திரம் இருப்பது தெரியவந்ததால், சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை இயக்குநரகத்தில் வாய்மொழியான ஒப்புதல் பெற்று இன்று 09.04.2025 ம் தேதி காலை 11.15 மணிக்கு கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.07/2025/AC/CB u/s.7 of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 ன்படி மேற்படி எதிரி திரு.ரமேஷ், காவலர், செட்டிப்பாளையம் காவல் நிலையம், கோவை என்பவர் மீது குற்ற வழக்கு பதிவு செய்தேன். Sir, Received the above complaint on 9.4.2025 at 10.45 hrs. Sd/- x-x-x-x 9/4/2025 (C.Latha), Inspector of

Police, V&AC, Coimbatore. Sir, After conducting a discreet enquiry, a case in Coimbatore V&AC Cr.No.07/2025/AC/CB u/s.7 of the Prevention of Corruption Act, 1988 as amended by the PC (Amendment) Act, 2018 was registered by me on 9.4.2025 at 11.15 hrs. Sd/- x-x-x-x 9/4/2025 (C.Latha), Inspector of Police, V&AC, Coimbatore. முதல் தகவல் அறிக்கையின் அசல், புகார்தாரரின் புகார்மனு, Pen Drive வுடன் புகார்தாரர் திரு.கிருஷ்ணமூர்த்தி அவர்களிடமிருந்து பெற்ற 63(4)(C) of BSA, 2023 ன் சான்றிதழ் மற்றும் File Hash Value Report with Certificate U/S 63(4)(C) of BSA, 2023 ன் ஆகியவற்றை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு சட்டங்களுக்கான சிறப்பு நீதிமன்றம், கோயம்புத்தூர் அவர்களுக்கும் மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தும், வழக்கினை விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன்.

9/4/2025

(C.லதா)

காவல்ஆய்வாளர்,

ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,

கோயம்புத்தூர்.